1972 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசாங்கப் போக்குவரத்துத் துறை மூலமாக இந்தக் குடியிருப்புகள் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அண்மையில் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதே கோரிக்கையை அரசுக்கு வைத்தார்கள். வீட்டுவசதி வாரியத் தலைவரோடு அரசு போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் கலந்து பேசி இப்போது வீட்டு வசதி வாரியமும், அதே போல் குடிசை மாற்று வாரியமும் கட்டுகின்ற குடியிருப்புகளில் அரசாங்கத் துறையில் இருக்கும் போக்கு வரத்துத் தொழிலாளர்களுக்குத் தனிச் சலுகைகளை அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் போக்குவரத்துத் துறைக்கு என்று நிலம் வாங்கி, அதிலே தனியாக வீடுகளைக் கட்டி போக்குவரத்துத் துறைக்குத் தரவும் வீட்டுவசதி வாரியம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதன் அடிப்படையில் கிட்டத்தட்ட 950 மனுக்கள் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்டு, வீட்டுவசதி வாரியத் தலைவருக்கு இப்போது அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கன்னியாகுமரி டிவிஷனில் எத்தனை வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன? அங்குள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாகர்கோயிலில் ரூ. 3,60,000 மதிப்பீட்டுத் தொகையில் 36 டெனமென்ட்ஸ் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது அரசாங்கப் போக்குவரத்து நான்கு ரீஜன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு ரீஜன்களிலுள்ள தலைமை அலுவலகங்களில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு வசதி செய்து தந்துவிட வேண்டுமென்ற அடிப்படையில் வீட்டுவசதி வாரியத் தலைவரையும், குடிசை மாற்று வாரியத் தலைவரையும் நானே நேரில் அழைத்து பேசி கூடிய சீக்கிரத்தில் ஒரு திட்டத்தை உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் பேருந்துப் பணிகள்

* 470 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து திருச்சி, கோவை வழியாக கூடலூருக்கு பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?